மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் கேட்ட கேள்வியின் தொடர்ச்சிதான் இந்தக் கேள்வியும். அரசினுடைய குறிக்கோளே எல்லாக் காவல் நிலையங்களுக்கும் காவல்துறை அதிகாரிகள் இருக்கின்ற இடங்களுக்கும், அரசின் சார்பிலேயே கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டும் என்பது தான். இருந்தாலும், நிதியாதாரங்களைக் கொண்டு, படிப்படியாக, இந்தப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, எல்லாக் காவல் நிலையங்களுக்கும், அதற்குரிய கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டுமென்ற குறிக்கோளை நோக்கி, இந்த அரசு நடைபோடும்.

9–05 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களை கூட்டாவிட்டாலும், மக்கள் தொகைக்கேற்ப, காவலர்களையாவது கூட்டும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒன்று; இருந்தாலும், நிதியாதாரத்தை முக்கியமாகக் கொண்டு, இதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. மக்கள் தொகை பெருகி வருகிற நேரத்தில், காவலர்களினுடைய எண்ணிக்கையையும் பெருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை.

மெக்னீஷிய உலோகத் திட்டம்.

* 6490 திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், மெக்னீசிய உலோகத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்த பணிகள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) இத்திட்டம் எப்போது நிறைவு பெறும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மெக்னீசியம் அண்டு மெரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில், மெக்னீசிய உலோகத் திட்டப் பணி செப்டம்பர் திங்கள் 1989-ல் முடிவுற்றது. உற்பத்திக்கான முன்னோட்டம் தொடங்கப்பட்டுவிட்டது.

(ஆ) 1—2—1990-ஆம் நாள் முதல் வர்த்தக ரீதியில் தொடங்கப்பட்டுள்ளது.

மண்டல போக்குவரத்து அலுவலகம்

* 9919 திரு. மு. க. ஸ்டாலின் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள விஜயராகவாச்சாரி தெருவில் அமைந்துள்ள மண்டல போக்குவரத்து அலுவலகத்தை (R.T.O.) வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குத் தொகுதியில் விஜயராகவாச்சாரி தெரு, சென்னை நகரத்தினுடைய மைய பகுதியாக இருக்கிற அண்ணாசாலையில் இணைகின்ற ஒரு தெருவாகும். இந்தத் தெருவில் அமைந்துள்ள ஆர்.டி.ஓ அலுவலகத்தால், போக்குவரத்து மாத்திரமல்ல. அந்தத் தெருவில் குடியிருப்பவர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதை மனதில் கொண்டு, துரிதமாக ஆர்.டி.ஓ அலுவலகத்தை, வேறிடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.டி.ஓ. அலுவலகத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, பொது மக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறான ஒரு இடத்திலே தான் அது அமைந்திருக்கிறது. எனவேதான் சொந்தமாக ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று, கிண்டி-மாம்பலம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், இரண்டாவது தளம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் இசைவும் பெறப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்பட்டு, புதியக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ 20.57 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக, போக்குவரத்து ஆணையர் அவர்கள் எவ்வளவு செலவாகும் என்பதற்கான செயற்குறிப்பைத் தெரிவித்துள்ளார்கள். அரசு, விரைவிலே இதன்